# சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன் – பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ , மாணவியருக்கு குறுந்தகடு இயக்கும் சாதனம் (CD Player) மற்றும் பாடங்கள் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள் (CDs) வழங்கும் திட்டம் செயல் படுத்துவது – 2010–2011ம் ஆண்டிற்கான தொடாரணை மற்றும் செலவினம் ரூ.3,34,900/– அனுமதித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத்(1) துறை.**

**அரசாணை (நிலை) எண்.37** நாள்.09.07.2010

ஆனி 25 திருவள்ளுவர் ஆண்டு 2041

**படிக்கப்பட்டது.**

1. அரசாணை (டி) எண்.30 சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 01.03.2010.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண். ந.க.எண்.5874/SS1/2010 நாள் 17.06.2010.

–––––––

**ஆணை.**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2009–2010 ஆம் ஆண்டில் பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ மாணவியருக்கு கற்பிக்கும் ஒலி நாடா பெட்டிகள் மற்றும் ஒலி நாடாக்கள் வழங்கும் திட்டத்திற்கு பதிலாக குறுந்தகடு இயக்கும் சாதனமும் மற்றும் பாடங்கள் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகளும் பெற்று வழங்கிட ரூ.3,34,900/– செலவினத்திற்கு ஒப்புதல் வழங்கி ஆணையிட்டது.

2. தற்போது, மேலே 2வதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளிகளில் பயின்று வரும் 10ஆவது மற்றும் 12ஆவது வகுப்பு மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு பதிவு செய்யப்பட்ட பாடங்கள் அடங்கிய குறுந்தகடுகள் (CDs) மற்றும் குறுந்தகடு இயக்கும் சாதனம் வழங்கப்பட்டு வருவதாகவும், மேற்படி சாதனத்தில், பார்வையற்ற மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்கள் குறிப்பிட்ட பாடத்தையோ அல்லது வினாவிடையையோ தெரிவுசெய்து எளிதாக படிக்க இயலாது என்பதினால், பதிவு செய்யப்பட்ட பாடங்கள் அடங்கிய குறுந்தகடுகளுடன் 'ஹெட் போன்' (Head Phone) வழங்கும்பட்சத்தில், அவர்கள் தேவையான பாடங்களின் பகுதிகளை தெரிவு செய்து படிப்பதற்கு எளிதாகவும் எடுத்துச் செல்ல ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார். மேலும், தற்போது பதிவு செய்யப்பட்ட பாடங்கள் அடங்கிய குறுந்தகடுகள் மற்றும் ஒரு குறுந்தகடு இயக்கியின் விலை மொத்தம் ரூ.2246/– (மதிப்பு கூட்டு வரி உட்பட) எனவும் அதற்குண்டான விவரங்களை பின்வருமாறும் தெரிவித்துள்ளார்:-

| வ.எண் | பொருள் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 10ம் வகுப்பு மாணவர்கள் | 75 |
| 2 | குறுந்தகடுகளின் எண்ணிக்கை | 75 |
| 3 | ஒரு ஹெட் போன் உடன் கூடிய குறுந்தகடு இயக்கியின் விலை | ரூ.2246/- |
| 4 | மொத்த குறுந்தகடு இயக்கியின் விலை | 75xரூ.2246= ரூ.1,68,450/- |
| 5 | ஒரு மாணவருக்கு வழங்கப்படும் குறுந்தகடுகளின் எண்ணிக்கை | 5 |
| 6 | ஒரு குறுந்தகட்டின் விலை | ரூ.100/– |
| 7 | மொத்த குறுந்தகடுகளின் விலை | 75x5xரூ.100= ரூ.37,500/- |
| 8 | 12ம் வகுப்பு மாணவர்கள் | 65 |
| 9 | ஒரு குறுந்தகட்டின் விலை | ரூ.100/– |
| 10 | ஒரு ஹெட் போன் உடன் கூடிய குறுந்தகடு இயக்கிகளின் விலை | ரூ. 2,246/- |
| 11 | மொத்த குறுந்தகடு இயக்கிகளின் விலை | 65xரூ.2246 ரூ.1,45,990/- |
| 12 | ஒரு மாணவருக்கு வழங்கப்படும் குறுந்தகடுகளின் எண்ணிக்கை | 8 |
| 13 | ஒரு குறுந்தகட்டின் விலை | ரூ.100/– |
| 14 | மொத்த குறுந்தகடு இயக்கிகளின் விலை | 65x8xரூ.100=52,000/- |
| | **மொத்தம்** | **ரூ. 4,03,940/–** |

**3.** மேற்காணும் கருத்துருவில் 'ஹெட் போன்' உடன் கூடிய குறுந்தகடு இயக்கும் சாதனம் மற்றும் பாடங்கள் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள் வழங்குவதால் அரசுக்கு ரூ.**4,03,940/–** செலவினம் ஏற்படும் என தெரிவித்து இரண்டிற்குமான செலவினத்தினைப் பட்டியலிட்டு, இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்திட திட்ட தொடராணையும் ரூ.**4,03,940/–** செலவினத்திற்கு நிதி ஒப்புதல் வேண்டியும், அரசுக்கு தமது கருத்துருவினை சமர்ப்பித்துள்ளார்.

**4.** மேற்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துரு அரசினால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. பார்வையற்றோருக்கான அரசு பள்ளிகளில் **10** ஆம் வகுப்பு மற்றும் **12** ஆம் வகுப்புகளில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு **2010–2011** ஆண்டு 'ஹெட் போன்' உடன் கூடிய குறுந்தகடு இயக்கும் சாதனங்கள் மற்றும் பாடங்கள் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள் வாங்கி வழங்கிட ரூ.**3,34,900/–** (ரூபாய் மூன்று இலட்சத்து முப்பத்திநான்காயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது. மேலும் குறுந்தகடுகள் மற்றும் குறுந்தகடுகள் இயக்கிகளை கொள்முதல் செய்ய தமிழ்நாடு நிதித் தொகுப்பு Art125 இன் கீழ் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை கடைப்பிடிக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேற்படி செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

“2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன் –I திட்டத்தில் சேராதது AA –BE பார்வையற்றோர் பள்ளி – 24 பொருள்களும் வழங்கலும்”.
(த.தொ.கு 2235 02 101 AA 2407)

6. இவ்வரசாணை நித்துறையின் இசைவுடன் அத்துறை அ.சா.கு.எண். 35590/நிதி(சந)/10, நாள் 06.07.2010. ன்படி வெளியிடப்படுகிறது

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு.ஜவஹர்,
அரசு செயலாளர்.

பெறுநர்.
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் (திரு.எஸ்.கே.பி), சென்னை–9.
செயலரின் தனிச் செயலர் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை – சென்னை–9.
நிதித் துறை, சென்னை–9.
இ. கோ / உ. ந.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.